## பாஸ்கா காலத்தின் 5 ஆம் ஞாயிற்றுக்கிழமை

*திருத்தூதர் பணிகள் 6:1-7; 1 பேதுரு 2:4-9; யோவான் 2:1-12*

### முன்னுரை

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, மழை காலத்தில் பெய்த கனமழைக்கு பிறகு கிராமப்புறத்தில்

சாலையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

தூரத்தில் இருந்து பார்த்தால் அந்த சாலை முற்றிலும் சீராக இருப்பதுபோல் தோன்றியது.

பல வாகனங்கள் எந்த ஆபத்தும் இல்லை என்று நினைத்து அதற்குள் சென்றுகொண்டே இருந்தன. ஆனால் கீழே இருந்த நிலப்பகுதி உடைந்து போயிருந்தது.

அந்த நேரத்தில், யாரோ ஒருவர் உடனே ஒரு பெரிய எச்சரிக்கை பலகையை வைத்தார் “சாலை மூடப்பட்டது – பாலம் உடைந்துள்ளது.”என்ற அந்த ஒரு எச்சரிக்கை பலகை பல உயிர்களை காப்பாற்றியது.

நாம் பாதுகாப்பாக சாலையில் சென்று கொண்டிருக்கிறோம் என்று நினைக்கும் நேரத்தில்,

நம் காலடியில் உறுதியான நிலமே இல்லாமல் சாலை பழுதடைந்துள்ளது என்று தெரிந்தால் அது மிகவும் பயங்கரமான விஷயம்.

இன்றைய விவிலிய வாசகங்களில

இயேசு நமக்கு எச்சரிக்கை மட்டும் கொடுக்கவில்லை.

“கவனமாக செல்லுங்கள் சாலை ஆபத்தானது” என்று அவர் சொல்லவில்லை.

“நீங்களே உங்கள் வழியைத் தேடிக்கொள்ளுங்கள்” என்றும் சொல்லவில்லை.

மாறாக அவர் தெளிவாகச் சொல்கிறார்:

“நானே வழி, சத்தியம், ஜீவன்.”

எனவே அவர் தான் நமக்கான உறுதியான அடித்தளம்.

அவர் தான் நமக்கான பாலம்.

இயேசு தான் நம்மை பாதுகாப்பாக வீட்டிற்கு அழைத்துச் செல்லும் சரியான பாதை.

இன்று நாம் அனைவரும் “உயிருள்ள கற்களாக” ஒன்று கூடியுள்ளோம்.

ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள் —

சிலர் சந்தோஷமாக, சிலர் சுமைகளுடன், சிலர் பலமாக, சிலர் சோர்வாக இருக்கலாம்.

சத்தமும் குழப்பமும் நிறைந்த வாழ்க்கையிலிருந்து ஓரளவு விலகி, நாம் மீண்டும் உறுதியான அடித்தளத்தில் நிற்கும் இந்த தருணம் மிக முக்கியமானது.

இந்த திருப்பலி, நம் இருதயத்தை மீண்டும் கிறிஸ்துவில் நிலைநிறுத்தும் ஒரு அரிய நேரம். அவர் தான் நம் மூலைக்கல்

நாம் எந்த வழியில் செல்வோம் என்று ஊகிக்காமல், நாம் செல்ல வேண்டிய வழியை நன்றாக அறிந்தவரை பின்பற்றும் தருணம் இதுவே

இந்த திருப்பலி நம் பயங்களை அமைதிப்படுத்தட்டும், நம் ஒன்றிப்பை பலப்படுத்தட்டும், நம்மை பிதாவிடம் அழைத்துச் செல்லும் இயேசுவின் வழியாகிய அவரை இன்னும் ஆழமாக விசுவாசிக்க உதவ இத்திருப்பலியில் விசுவாசித்தோடு பக்தியுடன் பங்கேற்போம்.

## திருப்பலி மறையுறை

மூலைக்கல்லின் மேல் கட்டப்பட்ட நாம் அனைவரும் அவர் வழியாய் நடந்து,

அவருள் உயிருள்ள கற்களாக மாறுவோம்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, வடக்கு ஆஸ்திரேலியாவின் காட்டுப்பகுதியில் சுற்றுலா சென்ற ஒரு குழு வழி தவறிசென்று விட்டார்கள்

அவர்கள் பயன்படுத்திய GPS கருவி செயலிழந்து போனது பாதை சரியாக தெரியவில்லை.

சூரியன் மறையத் தொடங்கியபோது, அவர்களுடைய நம்பிக்கையும் குறைந்து போனது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவரும் வித

விதமான யோசனைகளை வெளிப்படுத்தினர் “கிழக்கு தான்,” என்று ஒருவர் சொன்னார். “இல்லை, தெற்கு,” என்று மற்றொருவர் வாதிட்டார் “என்னைப் பின்தொடருங்கள் — எனக்கு திசை உணர்வு

அதிகம் இருக்கிறது என்று ஒருவர் கூறினார்.

அவர்கள் வாதித்துக கொண்டிருந்தபோது, ஒரு வயதான பூர்வகுடி வன காவலர் ஒருவர் வந்தார். அவர் அந்த நிலத்தில் வாழ்ந்து அனுபவம்பட்டவர் வானத்தை பார்த்தார், மண்ணைத் தொட்டார், மரங்களை கவனித்தார், பின்னர் அமைதியாகச் சொன்னார்.

“நீங்கள் வழியை ஊகிக்க வேண்டியதில்லை. நான் உங்களை வெளியே அழைத்துச் செல்கிறேன்.”

அவர்களுக்கு மேலும் வாதங்கள் தேவைப்படவில்லை அவர்களுக்கு வழியை நன்கு அறிந்த ஒருவர் தேவையாக இருந்தார்.

இன்றைய நற்செய்தியில் இயேசு சொல்வதும் அதுவே:

“நானே வழியும், சத்தியமும், ஜீவனும் ஆவேன் “ என்றுறைத்தார்

நான் உங்களுக்கு வழிகாட்டுவேன்” என்று சொல்லவில்லை

“நான் ஒரு வழிகாட்டும் வரைபடம் தருவேன்” என்று கூறவில்லை

“நானே வழி” என்று சொல்கிறார்.

இன்றைய வாசகங்களின் மையச் செய்தி இதுவே: கிறிஸ்துவே வழி. கிறிஸ்துவே மூலைக்கல் நாம் அவர்மேல் கட்டப்பட்டுள்ள உயிருள்ள கற்கள்.

“உங்கள் இதயம் கலங்காதிருக்கட்டும்”

நற்செய்தி இவ்விதமாக மென்மையாக ஆரம்பிக்கிறது:

“உங்கள் இதயம் கலங்காதிருக்கட்டும். கடவுளின் மேல் நம்பிக்கை கொள்ளுங்கள்; என்னிலும் நம்பிக்கை கொள்ளுங்கள்.”

நாம் வாழ்ந்து வரும் காலம் கலக்கமானது. செய்திகள், கருத்துக்கள், விவாதங்கள் எல்லாம்

ஒரே சத்தமாக உள்ளது. திருச்சபையிலும் பல மாற்றங்கள்

குருக்கள் எண்ணிக்கை குறைவால் பல இடங்களில் பங்குகள் இணைப்பு, பொறுப்புகள் மாற்றம்.

இது ஒரு புயலைப் போலத் தோன்றலாம்.

ஒரு கடுமையான புயலுக்குப் பிறகு, ஒரு முதிய மீனவரை நான் சந்தித்தேன்.புயலைக் கண்டு "பயந்தீர்களா?" என்று கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்: "நிச்சயமாக பயந்தேன் ஆனால் இதைவிட மோசமான புயல்களிலும் நான் சமாளித்து நங்கூரம் போட்டிருக்கிறேன்."

அதுதான் விசுவாசம். புயலை எதிர்கொள்ள பயப்படவில்லை என்று நடிப்பது அல்ல. பதிலாக நங்கூரம் எங்கே இருக்கிறது என்று அறிந்து செயல்படல் .

இயேசு அமைதியான கடலை தருவேன் என்று வாக்குறுதி அளிக்கவில்லை. மாறாக அவர் தம்மையே தருகிறார்.

ஆண்டவரே, எங்களுக்கு வழி தெரியாது"

தோமா நேர்மையாகச் ஆண்டவரிடம் வினவுகிறார்

"ஆண்டவரே, நீங்கள் எங்கு போகிறீர்கள் என்பதை எங்களுக்கு தெரியவில்லை நீங்கள் செல்லும் வழியை எப்படித் தெரிந்து கொள்வது?"

இது நம்முடைய கேள்விநமக்கு ஒரு ஆன்மீக GPS கருவி வேண்டும்: "200 மீட்டர்ருக்கு பிறகு இடது பக்கம் திரும்புங்கள்."

"துன்பத்தைத் தவிர்க்கவும்."

"வானத்தை 3.2 கி.மீ. தூரத்தில் அடைவீர்கள்."

ஆனால் இயேசு வழிகாட்டுதல் தரவில்லை. அவர் தம்மையே தருகிறார்.

"நானே வழி."

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது விதிமுறைகள் நிரம்பியது அல்ல. அது உறவு.

முதிய பெண் ஒருமுறை சொன்னார்: "தந்தையே, என் முதுமையின் காரணமாக நான் இனி அழகாக ஜெபிக்க முடியாது. ஆனால் நான் அவரை பார்த்துக் கொண்டே இருப்பேன்."

நான் கேட்டேன்: “கடவுள் உங்களுக்கு என்ன செய்கிறார்?” அவர் சொன்னார்: “கடவுள் எனக்கு எதுவும் செய்யவில்லை ஆனால் அவர் என்னைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்.”

கிறிஸ்துவே மூலைக்கல்

இன்றைய இரண்டாவது உருவகம் கட்டிடத்தைப் பற்றியது.

திருவிவிலியம் கிறிஸ்துவை மூலைக்கல் என்று அழைக்கிறது.

கட்டிடங்களில், மூலைககல் இரண்டு சுவர்களையும் இணைத்துக் காக்கிறது அது பலவீனமானால், கட்டிடம் முழுவதும் பாதிக்கப்படும்.

“கட்டிடக்காரர் ஒதுக்கித் தள்ளிய கல் மூலக்கல்லாயிற்று.”

இயேசு நிராகரிக்கப்பட்டார். அவமதிக்கப்பட்டார். சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் கடவுள் அவரையே தேர்ந்தெடுத்தார்.

திருச்சபை என்ற கல் அவர்மேல் நிற்கிறது மாறாக அமைப்பு, பணம், அதிகாரம் மீது அல்ல கிறிஸ்துவின் மேல் நிற்கிறது

நாம் வெறும் கற்கள் அல்ல. நாம் “உயிருள்ள கற்கள்.”

ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள். ஒவ்வொருவரும் அவசியமானவர்கள்.

ஒரு பழைய ஆலயத்தை பழுது பார்த்தபோது, ஒவ்வொரு கல்லையும் கணக்கிட்டு மீண்டும் கட்டினர். கற்கள் இல்லையெனில், கட்டிடம் பாதிக்கப்படும்.

அதுதான் திருச்சபை.

ஒருவர் விலகினால் கட்டிடத்தில் ஒரு இடைவெளி உண்டாக்கும். அதுவே ஒருவரை மன்னித்தால் கட்டிடத்தின் சுவர் வலுப்படும்.

கற்கள் கட்டடிடம் கட்டுபவரை காயப்படுத்தும் போது கட்டிடம் கட்டும் போது

கற்களால் கட்டிடம் கட்டவும் முடியும்; காயப்படுத்தவும் முடியும்.

ஒரு பங்கில் இரண்டு பெண்கள் இருபது ஆண்டுகளாக பேசாமல் இருந்தார்கள் அது பாஸ்கா விழாவின்போது வைக்கப்படைம் மலர்களைப் பற்றிய தகராறு காரணமாக!ஒருவர் வெள்ளை மலர்கள் வேண்டும் என்றார். மற்றவர் மஞ்சள் மலர் வேண்டும் என்றார்.

ஒரு வாரம் மட்டுமே இருக்கும் மலர்களுக்காக இருபது ஆண்டுகள் பேச்சு வாரத்தை இல்லாத அமைதி!

இது சிரிப்பாகத் தோன்றலாம் — ஆனால் நமக்கு நினைவூட்டுகிறது.

அப்போஸ்தலர்களின் செயல்களில், ஆரம்ப திருச்சபையிலும் பிரச்சனைகள் இருந்தது. கிரேக்க மொழி பேசும் விதவைகள் புறக்கணிக்கப்பட்டனர்.

தீய நோக்கம் இல்லை ஆனால் புறக்கணிப்பு காயப்படுத்துகிறது.

அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் அதை புறக்கணிக்கவில்லை. புறக்கனிக்கப்பட்ட சமூகத்தை ஒன்று சேர்த்தார்கள். ஜெபித்தார்கள்.

“ஆவியாலும் ஞானத்தாலும் நிறைந்த ஏழு பேரை” தேர்ந்தெடுத்தார்கள்.

ஒரு அழகான உண்மை

உணவு பரிமாறுவது கூட புனித சேவை என்று கருதப்பட்டது.

ஒரு முதிய விதவை வாரம் தோறும் ஒரு கேக் செய்து தனிமையில் உள்ளவருக்கு அனுப்புவார்.“இது பெரிய விஷயம் அல்ல. ஆனால் அவர்கள் மறக்கப்படவில்லை என்பதுதான் முக்கியம்

அதுதான் திருச்சபை.அதுதான் உயிருள்ள கல்.

ஒவ்வொரு கல்லும் முக்கியம்

ஒரு புனிதர் சொன்னார்:“நான் என் இடத்தில் முக்கியமானவன்;

ஒரு தேவதூதன் தனது இடத்தில் இருப்பதைப் போல.”

பெருமையால் அல்ல — உணர்வால்.

திருமுழுக்கில் நாம் “அரச குருத்துவம்” பெற்றவர்கள்.

சேவை என்பது குருக்கள் மட்டும் செய்ய வேண்டியது அல்ல. எல்லாரும் அழைக்கப்பட்டவர்கள்.

சிலர் அறிவிப்பார்கள். சிலர் ஒழுங்குபடுத்துவார்கள்.சிலர் ஏழைகளைப் போற்றுவார்கள். சிலர் அமைதியாக ஜெபிப்பார்கள்.

ஒரு முதியவர் சொன்னார்:“நான் இனி எதுவும் செய்ய முடியாது.”நான் சொன்னேன்: “உங்களால் அர்ப்பணிக்க முடியுமா?”

அவர் குழம்பினார். “உங்கள் துன்பத்தை அர்ப்பணியுங்கள்.

உங்கள் நாளை அர்ப்பணியுங்கள்.”

அடுத்த வாரம் அவர் சொன்னார்:

“என் பேரக்குழந்தைகளுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணிக்கிறேன்.”

அவர் மீண்டும் ஒரு உயிருள்ள கல் ஆனார்.

கல்லை வீணாக்காதீர்கள்

ஒரு பழைய கதை

ஒரு மனிதன் மாலை நேரத்தில் கற்கள் நிறைந்த பையை கண்டான். அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக கடலில் எறிந்தான். கடைசியாக இருந்த ஒன்றை வைத்துக்கொண்டான்.

பின்னர் அதை பார்த்தபோது  அது ஒரு விலைமதிப்புள்ள ரத்தினம்.

உடனே ஓடினான். கடலை நோக்கி

ஆனால் மற்றவை கடலில் மறைந்துவிட்டன.

அந்தக் கற்கள் நம்முடைய நாட்கள். நாம் அவற்றை வீணாக்குகிறோம்:  “இது ஒரு சாதாரண நாள்.”“இது ஒரு சாதாரண ஞாயிறு.”

ஆனால் ஒவ்வொரு நாளும் ஒரு பொக்கிஷம்.இன்றய நாள் கூட. என்பதை மறக்க கூடாது

நிலைத்து நிற்கும் வீடு

ஒரு நிலநடுக்கத்திற்கு பிறகு, ஒரு ஆலயம் இடிந்து விழுந்தது ஆனால் ஒரு பகுதி மட்டும் விழவில்லை.

ஏன்?

அங்கு கற்கள் உறுதியாக இணைக்கப்பட்டிருந்தன. ஒன்றை ஒன்று தாங்கின.

அதுதான் கிறிஸ்து நம்மை அழைக்கிறார்.

நிறைவான கற்களாக அல்ல.ஒரே மாதிரியான கற்களாக அல்ல. ஆனால் ஒன்றிணைந்த கற்களாக.

கிறிஸ்துவோடு இணைந்த கற்கள். ஒருவரை ஒருவர் தாங்கும் கற்கள்.

புயல்கள் வரும். பலவீனம் வரும். ஆனால் நாம் அவரில் நம்பிக்கை வைத்து நங்கூரமிட்டால், அவரோடு நடந்தால், ஒன்றுபட்டால் இந்த வீடு நிலைத்து நிற்கும்.

ஒருநாள் அந்த வழி நம்மை தந்தையின் இல்லத்திற்குக் கொண்டு செல்லும் —அங்கு இனி எந்த புயலும் நம்மை அசைக்காது

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia
and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai